# புனித லாரன்ஸ் ஜஸ்டினியன் (1381 – 1555)

வெனிஸ் நகரில் பிறந்த இவர் சிறு வயதில் தந்தையை இழந்தார். தாய் இவரை பக்தியுள்ளவராக வளர்த்தாள். இவருடைய முன்னோர்களின் பலர் புனிதர்களாக வந்திக்கப்படுகிறார்கள். இவர் மணம் முடிக்க வேண்டுமென்று விரும்பிய இவருடைய தாய் புண்ணியவதியான ஓர் அழகிய பெண்ணை ஏற்பாடு செய்தாள். இவர் வேண்டாமென்று மறுத்துத் துறவியானார்.

நவ சந்நியாசியாக இருக்கும் போது எல்லோருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். தவ முயற்சிகள் செய்வார். தாழ்மைகளைத் தேடிப் போவார். உலகத்தைத் துறந்தபின் தம் தந்தையின் வீட்டில் வருவதில்லையென்றாலும் தாயும், சகோதரர்களும் சாகக் கிடக்கும் பொழுது மாத்திரமே வீட்டிற்கு வந்தார்.

இவர் குருப்பட்டம் பெற்ற பின் மிகுந்த பக்தியோடு திருப்பலி ஒப்புக் கொடுத்து மோட்சத்தின் மகிழ்ச்சிகளை அடிக்கடி நினைத்துப் பார்ப்பார். “இந்த, அந்த பொருளில் ஏன் இளைப்பாற்றி காண விரும்புகிறாய்? நீ ஆசிப்பது என்னிடம் மாத்திரமே அகப்படும். இதோ அதை என் கையில் காணலாம். கடவுளின் ஞானமாகிய என்னிடமாய் அதைத் தேடு. என்னை உன் ஆன்மாவின் பார்த்தாவாகவும் உனது உரிமைச் சொத்தாகவும் கருதுவாயானால் நீ விலை மதிப்பிட முடியாத செல்வங்களைச் சேகரிப்பாய்” என்று இயேசு சொல்வதாக இவர் அடிக்கடி கூறுவார்.

இவர் சபையின் பெரிய சிரேஷ்டரானார். சபையை சீர்திருத்தினார். நன்றாக பரிசோதிக்கப்பட்டவர்களையே சபையில் சேர்த்தார். பாப்புமார்களுக்குக் கீழ்ப்படிந்து இவர் ஆயர் பதவியையும், பிதாப்பிதா என்னும் பதவியையும் பெற்று 08.01.1555ல் இறந்தார்.

**சிந்தனை:**

அமைதியும், ஆனந்தமும் கொண்டிருக்க விரும்புகிறவர்கள் அவற்றை உலகப் பொருட்களில் தேடலாகாது.

**செபம்:**

ஆண்டவரே, நான் அடிக்கடி மோட்சத்தை நினைக்கும் வரம் தாரும்.